**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

O.S. 114/2016

.வா.சா3 தவசி

| | |
|---|---|
| Name | : தவசி |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 27.02.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த வழக்கின் 3ம் நபர் ஆவேன். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

(நிரூபண வாக்குமூலம் தாக்கல். ஆவணங்கள் தாக்கல் இல்லை)

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வாதிகள் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். பொதுபாதைக்காக தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகள் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். வாதிகளின் தாயார் சொத்தை கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தின் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதிகள் யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் அபிலா என்பவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள். அபிலாவின் கணவர் பெயர் தெரியுமா என்றால் தெரியும். அந்தோணிராஜ் ஆகும். பிரதிவாதி பற்றி எனக்கு தெரியவில்லை என்றும், அவரது சரியான பெயர் கூட எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. பாதைக்கு வடக்கே எத்தனை வீடு உள்ளது என்றால் 3 வீடுகள் உள்ளது. பிரதிவாதி வீடு எந்த வருடம் கட்டப்பட்டது என்றால் 20 வருடத்திற்கு முன்னர் கட்டப்பட்டது. 20 வருடத்திற்கு முன்பு வீடு கட்டிய போது ஷெல்ப் வைத்து

கட்டப்பட்டது என்றால் அதற்கு பிறகு தான் கட்டப்பட்டது. அந்தோணிராஜ்குமார் வாங்கிய வீடு வாதிகளின் வீட்டிற்கு மேற்குபக்கம் உள்ளது என்றும், அது கிரையமாக வாங்கிய வீடு என்றும், அதில் எந்த ஒரு கட்டுமானமும் அவர் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கிரைய பத்திரம் பற்றியோ, வீட்டின் அளவு பற்றியோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் வீடு பாவூர்சத்திரம் பஸ்ஸ்டாப்பிற்கு கீழ்பக்கம் உள்ள மேலபாவூர் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். வாதிகளுக்கும், பிரதிவாதிக்கும் எத்ததனை வருடமாக பிரச்சனை நடந்து வருகிறது என்றால் 10 வருடங்களாக பிரச்சனை நடந்து வருகிறது. இடம் சம்பந்தமாக நிலத்தை அளந்தது சம்பந்தமாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள அளவுகள் நான் தோராயமாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு வாதிகளின் கிரையபத்திரம் பற்றியோ, பிரதிவாதிகளின் கிரைய பத்திரம் பற்றியோ தெரியவில்லை என்றும், நான் வாதிகளுக்கு உறவினர் என்ற முறையில் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(இந்த குறுக்குவிசாரணை 2ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது)

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.